# 'சாஸ்த்ரா' பல்கலை.யில் பம்மல் சம்பந்த முதலியார் கருத்தரங்கம்

**தஞ்சாவூர், நவ. 10:** தஞ்சாவூர் சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தில் சாகித்ய அகாதெமி மற்றும் பல்கலைக்கழகத்தின் கலை, அறிவியல், மானிடவியல் மற்றும் கல்வியியல் துறை சார்பில் பம்மல் சம்பந்த முதலியாரின் 150-ஆம் ஆண்டு விழா கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை (நவ.8) நடைபெற்றது.

இந்த விழாவுக்கு இயந்திரப் பொறியியல் துறையின் புல முதன்மையர் கே. புகழேந்தி தலைமை வகித்தார்.

புல முதன்மையர் பேராசிரியர் உமா மகேஸ்வரி வாழ்த்துரையாற்றினார். துணைப் புல முதன்மையர் சாந்தி தொடக்கவுரையாற்றினார். தமிழ்த் துறைப் பேராசிரியர் கோ. பழனி, 19 ஆம் நூற்றாண்டின் நாடக வரலாற்று ஆராய்ச்சியாளராகவும், நடிப்பு முறை இயல் கோட்பாட்டாளராகவும் திகழ்ந்த பம்மல் சம்பந்தனாரின் பெருமைகள் குறித்து பேசினார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் ராஜா ரவிவர்மன், சரவணன் வேலு, அருணகிரி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறைத் தலைவர் கற்பகம், முனைவர் ஆழி. வெங்கடேசன், திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் கி. பார்த்திபராஜா, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சி. கார்த்திகேயன் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். பம்மல் சம்பந்தனார் குறித்த நாடக அரங்கேற்றமும் நடைபெற்றது.

தமிழ்த் துறைப் பேராசிரியர் இரா. ஜெயஸ்ரீ, முனைவர் சிந்தியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.